

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.12.2025) முகாம் அலுவலகத்தில் கழகப் பொருளாளர், மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை விரிவாக்க திட்டத்தை தொடங்கி வைத்ததை முன்னிட்டு வேலூர் மாவட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் 33,450 மகளிருக்கு வழங்கி தொடங்கி வைத்தார். உடன் தெற்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், ஊராட்சி குழுதலைவர்கள் லோ.ரவிச்சந்திரன்,என்.இ. சத்யானந்தன், வேல்முருகன், மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பெரு மாநிலங்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளி

# பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, டிச.14-**

**"பெரு மாநிலங்களையெல்லாம் பின்னுக் குத்தள்ளி பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது" என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் கூறியுள்ளார்.**

திராவிட மாடல் ஆட்சியில், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (#GSDP) 2021-22 நிதியாண்டில் ரூ.20.72 லட்சம் கோடி ஆக இருந்தது, அது 2024-25 நிதியாண்டில் ரூ.31.16 லட்சம் கோடி ஆக உயர்ந்துள்ளது. அதாவது 50% அபார வளர்ச்சியை 4 ஆண்டுகளில் எட்டியுள்ளது.

தனிநபர் வருமானம் 2021-22 நிதியாண்டில் ரூ.2,42,339 ஆக இருந்தது, அது 2024-25 நிதியாண்டில் ரூ.3,61,619 ஆக உயர்ந்துள்ளது. அதாவது 49% அபார வளர்ச்சியை 4 ஆண்டுகளில் எட்டியுள்ளது.

**இந்தியாவிற்கே வழிகாட்டும் திராவிட மாடல் பொருளாதாரம்!**

திராவிட மாடல் ஆட்சியின்,மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) மற்றும் தனிநபர் வருமானம் ஆகியவை அபார வளர்ச்சியை எட்டியுள்



ளது . மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) வளர்ச்சி: 2021-22 முதல் 2024-25 வரையிலான காலத்தில் 50% வளர்ச்சி அடைந்துள்ளது. தனிநபர் வருமானம் (Per Capita Growth) வளர்ச்சி: இதே கால கட்டத்தில் 49% வளர்ச்சி அடைந்துள்ளது.


கடந்த நிதியாண்டைக் காட்டிலும் 15.98% வளர்ச்சியை அடைந்துள்ளது. மேலும் இந்தியாவிலே இது வரை எந்த மாநிலமும் இந்த வளர்ச்சியை எட்டவில்லை என்பதும் முதல் முறையாக தமிழ் நாடு மட்டுமே இந்த நிலையை எட்டியுள்ளது குறிப்பிடத் தக்கது.

தமிழ்நாட்டின் இந்த அபரிமித பொருளாதார வளர்ச்சி, மத்திய அரசுத் தரவுகள் மூலமே தெரியவரும் இனிய வேளையில், அதனையொட்டி கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**வானுயர் GSDP வளர்ச்சி விகிதம்; பெருமாநிலங்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளிய தமிழ்நாட்டின் சாதனை!**

**பரப்பளவில் பெரிய மாநிலம் இல்லை, மக்கள் தொகையிலும் பெரிய மாநிலம் இல்லை, ஒன்றிய அரசின் ஆதரவு பெருமளவில் இல்லை! இருந்தும் GSDP வளர்ச்சியில் 16%உடன் தமிழ்நாடு நம்பர் ஒன் என்றால் அதுதான் திராவிட மாடல்.**

**கடந்த மூன்றாண்டுகளில் நிலையான, அதேவேளையில் மிக அதிக**




**மான வளர்ச்சியைக் கண்டுள்ளது தமிழ்நாடுதான்! சொல்வது நாம் அல்ல, இந்திய ரிசர்வ் வங்கி!**

**2021-2025 வரையிலான நிதியாண்டுகளில் மட்டுமே 10.5 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது தமிழ்நாட்டின் பொருளாதாரம்! மொத்த மதிப்பு ரூ. 31.19 லட்சம் கோடி!**

**தனி நபர் வருமான உயர்விலும் வெற்றி!**

**நம்மோடு ஒப்பிடத்தக்க, வளர்ந்த பெரிய மாநிலங்களான, மகாராஷ்ட்டிரா, கர்நாடகம், குஜராத் போன்ற**




**வற்றை விஞ்சிய இந்த வளர்ச்சி விகிதம் - தமிழ்நாட்டுக்கே சொந்தம்!**

**தனிநபர் வருமான உயர்விலும் தொடர்கிறது தமிழ்நாட்டின் வெற்றி!**

**2031ஆம் ஆண்டு திராவிட மாடல் 2.0 நிறைவுறும்போது, இந்தியாவில் தமிழ்நாடு முதலிடத்தில் இல்லாத துறையே இல்லை என்ற நிலையை உருவாக்கிக் காட்டுவேன்! இது உறுதி!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## மேகதாது அணை திட்டத்தை எதிர்த்து

# உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மீண்டும் மனு தாக்கல்!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அறிக்கை!

**சென்னை, டிச.14-**

**மேகதாது அணை திட்டத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மீண்டும் மனு தாக்கல், செய்துள்ளது என்று நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பான அவரது அறிக்கை வருமாறு:-

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் ஒரு பெரிய அணை கட்ட கர்நாடக அரசு முயற்சித்ததை எதிர்த்து, தமிழ்நாடு அரசு 2018-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கும், அதனுடன் தொடர்புடைய பிற வழக்குகளும் 13.11.2025 அன்று விசாரணைக்கு வந்தன. இதில், மேகதாது அணை தமிழ்நாட்டிற்கு கடும் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும், 16.02.2018 அன்று வழங்கப்பட்ட



உச்சநீதிமன்ற இறுதித் தீர்ப்பின் பத்தி 353 இல் கூறியுள்ளபடி, மேகதாது அணை கட்ட முயற்சிப்பது, இருமாநிலங்களுக்கு இடையேயான பிரச்சினையை மேலும் பெரிதாக்கும் என்பதையும் குறிப்பிட்டு தமிழ்நாடு வாதிட்டது.

இவ்வழக்கில் உச்சநீதிமன்றத்தின் ஆணை 22.11.2025 அன்று வெளிவந்தது. இந்த ஆணையில், மேகதாது அணை தொடக்க நிலையில் தான் உள்ளது என்றும், இத்திட்டம் உச்சநீதிமன்ற முந்தைய தீர்ப்பிற்கு உட்பட்டதா இல்லையா என்பதை நிபுணர்கள் அடங்கிய மத்திய நீர்வளக் குழுமம் தான் தீர்மானிக்க முடியும் என்றும் கூறியுள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு அதன் வாதங்களை மத்திய நீர்வளக் குழுமத்திடம் முன்வைக்கவும் ஆணையிட்டுள்ளது.

மேலும், இத்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள சில கருத்துகள், குறிப்பாக, மாநிலங்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நீரை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை தாங்களே முடிவு செய்யலாம் எனத் தெரிவித்திருப்பது, 16.02.2018 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பின் பத்தி 447 இல், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நீர், ஆணையில் குறிப்பிட்டுள்ள திட்டங்களுக்கே பயன்படுத்த வேண்டும் எனக் கூறியுள்ளதற்கு முரணாக உள்ளது.

ஆகையால், இவ்வழக்கில் உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு சார்பாக வாதிடும் மூத்த வழக்கறிஞர்களின் ஆலோசனைப்படியும், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் உத்தரவின்படியும், உச்சநீதிமன்றத்தின் 13.11.2025 ஆணையை மறுபரிசீலனை செய்ய தமிழ்நாடு அரசு 11.12.2025 அன்று உச்சநீதிமன்றத்தில் ஒரு மறு ஆய்வு மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

மேலும், மத்திய நீர்வளக் குழுமத்திட மும் மேகதாது அணை எவ்வாறு தமிழகத்திற்குப் பாதகமாக இருக்கும் என்பதையும், உச்சநீதிமன்ற ஆணைக்கு முரணாக இருக்கும் என்பதையும் குறிப்பிட்டு, ஒரு விரிவான மனுவை 09.12.2025 அன்று அளித்துள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு காவிரி டெல்டா விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. கர்நாடக அரசின் முயற்சியை தமிழ்நாடு அரசு ஒருபோதும் அனுமதிக்காது.

இவ்வாறு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தி.மு.க. சட்டத்துறை சார்பில் நியமிக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், அண்ணா அறிவாலயம் "கலைஞர் அரங்கத்தில்" நேற்று (13.12.2025) காலை 10.00 மணியளவில் தி.மு.க. சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா. விடுதலை தலைமையில், கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, எம்.பி. முன்னிலையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் சட்டத்துறை இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், கழக வழக்கறிஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.